# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No. 75/2015 Date: 27.08.2024

PW1 – கோபால்

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

குமாரபாளையம் கிராமம் ச.எண்.4/2ல் உள்ள நிலம் அரசு புறம்போக்கு என்பதை காண்பிக்க நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா இறக்கும் போது என் வயது 15. அவர் பவானி அரசு மருத்துவமனையில் இறந்தார். என் அப்பா இறந்த போது என் அம்மா மற்றும் எங்கள் குடும்பத்தார் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா 1998ல் இறந்த பிறகு அவரது பூர்வீக சொத்தில் பாகம் வேண்டும் என்று கேட்டு நாங்கள் 2015 வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1வது அயிட்ட சொத்து பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டதால் தான் நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1வது அயிட்ட சொத்தில் ஐயனாரப்பன் கோவிலுக்கு தடம் விடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த சொத்தில் நாங்கள் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்பதால் தான் கோவில் தடம் உள்ள விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கோவிலுக்கு இலவசமாக தடத்திற்கு நிலம் விட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பள்ளிபாளையம் பேப்பர் மில்லில் வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். அவருக்கு 2மகன்கள், 1 மகள் உள்ளார்கள். அவரது மனைவி செல்வி 2 வருடத்திற்கு முன்பு விபத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதன் பிறகு 2ம் பிரதிவாதி குழந்தைகளுடன் தேவூர் மயிலம்பட்டியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். அப்போது தாவா சொத்தில் 1வது அயிட்டத்தில் வீடு கட்டிய போது நாங்கள் தகராறு செய்தோம் என்றால் சரியல்ல. வீடு கட்ட வேண்டாம் என்று தடுத்தோம். அதனால் 2ம் பிரதிவாதி போலீஸ் புகார் கொடுத்து காவல் நிலையத்தில் எங்களை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு 3ம் வாதி முருகன் வரவில்லை என்றால் சரியல்ல. முருகன் தனக்கு குமாரபாளையம் சொத்து போதும் என்றும் அதனால் தாவா சொத்திற்கு அவர் வரவில்லை என்றால் சரியல்ல. தாவா வாதி, பிரதிவாதிகள் உறவு முறை தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதால் தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா

முறையாக மதிப்பீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி வசந்தா எந்த தேதியில் தாவா சொத்தில் வீடு கட்டினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்பதால் நிரந்தரத்தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 சட்டப்படி செல்லத்தக்கது தான் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 2வது அயிட்ட சொத்தில் உள்ள வீடு தாவா நிலுவையில் இருக்கும் போது கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த வீடு 2008ல் கட்டப்பட்டது என்பதை காண்பிக்க நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கூட்டு உரிமையாளருக்கு எதிராக எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா 2வது அயிட்ட சொத்தின் பட்டாதாரர்களை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். 01.04.2015ல் நடைபெற்ற பஞ்சாயத்தில் கலந்து கொண்டவர்களின் பெயரை நான் முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-கோபால்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.